1979 நவம்பர் 8]

திருநெல்வேலியில் கலை, கைத்திறன்கள் கல்லூரி.

*வினா எண், 151 திரு யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென் மாவட்டங்களின் தேவையை நிறைவு செய்ய நெல்லையில் ஓர் கலை மற்றும் கைத்திறன் கல்லூரி நிறுவும் எண்ணம் அரசுக்கு உண்டா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) இல்லை.

திரு யா. சை. மு. யூசுப்: தென் மாவட்டங்களில் இது போன்ற கலைஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இருந்தாலும் கூட விஞ்ஞான முறையில் அவர்கள் கற்கக்கூடிய அளவில் ஏற்பாடுகள் இல்லை என்பதால் தென் மாவட்ட மக்கள் கலைத்திறனைப் பயன்படுத்தி அதை உலகெங்கும் பரப்பும் வகையில் பலப்படுத்தும் முறையில் அந்தப் பகுதியில்—பாளயங்கோட்டை தென் நாட்டு ஆக்ஸ்போர்ட்-என்று பெயர்பெற்றது உள்ளவர்கள் பயிற்சிபெறும் வகையில் ஒரு கலை மற்றும் கைத்திறன் கல்லூரியை பாளயங் கோட்டையில் நிறுவுவதற்கு அரசு முன்வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி: (அமைச்சரின் பேரவைச் செயலர்) தற்போது சென்னை மற்றும் கும்பகோணம் ஆகிய இவ்விரண்டு இடங்களில் அரசு கலை மற்றும் கைத்தொழில் கல்லூரிகள் உள்ளன. மேற்கூறிய இரண்டு கலைக்கல்லூரிகள் தவிர மாமல்ல புரத்தில் சிற்பம் மற்றும் கட்டடக்கலை பயிலகம் ஒன்று உள்ளது. அக்கல்லூரிகளில் முழுநேர மற்றும் பகுதிநேர பயிற்சி வகுப்புகள் மாணவ மாணவியருக்காக நடைபெறுகின்றன. ஆகவே மேற் கொண்டும் ஒரு கலை மற்றும் கைத்திறன் கல்லூரி நிறுவும் எண்ணம் அரசுக்கு இல்லை.

திருச்சியில் குடிநீர் வழங்கல்.

*வினா எண். 152 திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு தொழிலாளர் - நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:— ரூ. 360 லட்சம் செலவில் திருச்சிக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டு முதல் கட்டமான ரூ130 லட்சம் மதிப்பீடு கொண்ட பணி கள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த முதல் கட்ட பணிகளை முழுதும் பயனுக்கத்திற்குக் கொண்டு வரும் வகையில் குடிநீர்க் குழாய்கள் அமைத்தல், கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

கட்டுதல் போன்ற இரண்டாவது கட்ட பணிகளை மேற்கொள்ள ரூ.161.30 லட்சம் பெறுமானமுள்ள திட்டத்திற்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் மூன்றாவது கட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 9-50]

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் குடிநீர் மேம்பாட்டுக்காக, 360 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் போட்டிருப்பதாகவும் 130 லட்சம் ரூபாய் அளவுக்கு வேலைகள் முடிந்துள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சி நகரத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இப்போது 130 லட்சம் ரூபாய் செலவு செய்து பல தொட்டிகள் கட்டப் பட்டிருந்தாலும் தொட்டிகளிலிருந்து தண்ணீர் வருவதில்லை. ஆகவே விரைந்து காரியங்களை முடிக்கும் ஆற்றல் படைத்த அமைச்சர் அவர்கள், இந்த குடிநீர் திட்ட வேலைகளை அனைத்தையும் விரைந்து முடிப்பதற்கும், திருச்சி நகர மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் விரைந்து செயல்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொட்டிகளில் தண்ணீர் சரியாக வருவதில்லை என்பதை அறிந்து தான் 'இன்டர்னல் பைப் லைன்' போடுகின்ற வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. இது ஃபேஸ் 1, 2, 3 என்ற முறையில் வேலைகள் எடுக்கப்பட்டு விரைவில் முடிந்துவிடும், அதன்பின்னால் தொட்டிகளிலும் சரியாக தண்ணீர் வரும். மேலும் ஒரு நல்ல செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது கொடுக்கப்படும் தண்ணீர் போதாது என்று 5 எம்.ஜி.டி. அளவுக்கு மேலும் தண்ணீர் வழங்க ஒரு திட்டத்தை தயாரிக்க ஆய்வு நடத்தப் பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிச்சி ஊராட்சிக்கு சிறுவாணி நீர்.

*வினா எண். 153 திரு. க. மருதாசலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறுவாணி தண்ணீர் வழங்கும் திட்டத்தை கோவை மாவட்டத்திலுள்ள "குறிச்சி ஊராட்சி" வரைநீட்டித்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—

(அ) ஆம்

(ஆ) ரூ.104.32 லட்சத்திற்கான திட்டமொன்றுக்கு அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. விரைவில் வேலை தொடங்கப் படும்.